# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No. 137/2015 Date: 14.10.2024

PW3- மாதையன்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா பரிகாரம் பற்றி தெரியும். தாவா சொத்து சங்கரகவுண்டர், குப்பாயம்மாளுக்கு பாத்தியப்பட்ட கூட்டு குடும்ப சொத்து என்றால் சரிதான். அவர்களுக்கு வாதிகள் மற்றும் 3 ம் பிரதிவாதி மகள்கள் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் மகன்கள். சங்கரகவுண்டர், குப்பாயம்மாள் ஆகியோர் உயிருடன் இருக்கும் போதே தாவா சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகளுக்கு வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதில் கிழபுற சொத்து 2 ம் பிரதிவாதிக்கும் நடுபாக சொத்து 1 ம் பிரதிவாதிக்கும் மேல்புற சொத்து குப்பாயம்மாளுக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அப்போது வாதிகள் மற்றும் 3 பிரதிவாதி அவர்களது பாகத்திற்கு தலா ரூ.5,000/- ரொக்கம் பெற்றுக்கொண்டு அவர்களது பாகத்தை விடுதலை செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு பாகம் பிரிந்த சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. குப்பாயம்மாளுக்கு பிரிந்த மேல்புற சொத்தை 1, 2 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் எனக்கு பழக்கம். நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-மாதையன் Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.